1967 மார்ச் 29]

திரு. தோ. மு. நல்லசாமி: மனிதர்கள் இழுக்கக்கூடிய ரிக்ஷாக்களையும் சைகிள் ரிக்ஷாக்களையும் ஒழிக்க வேண்டுமென்கிறபோது, போக்குவரத்துக்கு அதிகமாக, அவசியமாகத் தேவைப்படுவதற்கு மாற்று யோசனையாக அரசாங்கத்திடம் என்ன திட்டம் இருக்கிறதென்று அறியலாமா?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: இது சம்பந்தமாக 1-4-1967க்குள் யோசனை தரும்படியாக போலீஸ் அதிகாரிகளிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பதில் வந்தவுடன் சென்னைக்கு மாத்திரமல்ல, எல்லா இடங்களிலும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் என்ன மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்தலாம் என்பது யோசிக்கப்படும்.

Abolition of hand-pulled rickhaws

* 5 *Q.*—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:—

Whether there is a proposal to completely abolish the plying of hand-pulled rickshaws in the city of Madras?

மதிப்பிற்குரிய திரு. மு: கருணாநிதி: உடனடியாக கை ரிக்ஷாக்களை அறவே அகற்றும் எண்ணம் அரசினர்க்கு இல்லை.

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: உடனடியாக கை ரிக்ஷாக்ஸ்டேஜ் பை ஸ்டேஜாக எடுத்துவிட வேண்டுமென்பது பழைய அரசாங்கத்தின் கொள்கை. கை ரிக்ஷாக்களைவிட சைகிள் ரிக்ஷா கொஞ்சம் மேலானது. கை ரிக்ஷாக்களை ஒழிக்கிறபோது சைகிள் ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா?

மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி: இந்த இரண்டு கருத்துக்களும் இருக்கிற நிலைமைக்கேற்றபடி கவனிக்கப்படும்.

குடி நீர்த் திட்டம்.

*6 கேள்வி.—திரு. சோ. அழகர்சாமி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டி நகரத்துக்கான குடி தண்ணீர்த் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: கோவில்பட்டி நகராட்சிக்கான குடிநீர் வழங்கு திட்டம் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தற்காலிக நிவாரணமாக நகரசபையிலிருந்து 2 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக சாங்ஷன் செய்து, நிறைவேற்றி நிவாரணம் அளிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1967 மார்ச் 29

மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: இப்போதுள்ள நிலைமையில் 1967 ஜூன் மாதத்திற்குள் அந்தத் திட்டம் முடிந்து விடும் என்று கூறப்படுகிறது. ஆகவே, தற்காலிகத் திட்டம் தேவையில்லையென்று கருதுகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இத்துடன் வினாக்கள், விடைகள் முடிவடைகின்றன.

குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்மீது மற்றோர் உறுப்பினர் உரிமைத் தீர்மானம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சார், நான் இந்தச் சபையில் ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி . . . (மணி அடிக்கப்பட்டது).

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைத் தீர்மானத்தை என்னிடம் கொடுத்தார்கள். அந்த உரிமைத் தீர்மானத்தைப்பற்றி அவர் நன்றாக எடுத்து என்னிடத்தில் விளக்குவதற்குரிய வாய்ப்பை என் அறையில் கொடுத்தேன். அவர் சொன்ன கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு, அதை இந்த அவையில் எழுப்புவதற்குரிய அனுமதியைக் கொடுக்க மறுத்தேன். இப்பொழுதுள்ள கேள்வி, அவர் கொடுத்த உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் நான் வாசித்துக் காண்பிக்க வேண்டுமா? அல்லது, மாண்புமிகு உறுப்பினரையே அவரது உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் வாசிக்க அனுமதிக்க வேண்டுமா? அல்லது நான் எனது அறையிலேயே சொன்ன முடிவு இறுதியானதா? என்கிற கேள்விகள் எழுகின்றன. இதுபற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள். இதில் என்னுடைய தீர்ப்பை நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானம் இந்த அவையிலே உள்ள மற்றொரு உறுப்பினர் மீது ஆகும். உரிமைத் தீர்மானங்களை இரண்டு வகைப்படுத்தலாம். இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர்மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு வருகிற உரிமைத் தீர்மானம் ஒரு வகை. மற்றொரு வகை, வெளியார் மீது கொண்டுவருகிற உரிமைத் தீர்மானம். இரண்டையும் வெவ்வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் பற்பல உரிமைகள் இருக்கின்றன. ஆகவே, ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது ஓர் உரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வரும்போது அதை நான் என்னுடைய அறையிலேயே நன்கு பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்த உரிமைத் தீர்மானத்திற்கு ஆதாரம் இருக்கிறதா என்று முதலில் நான்